**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 11.02.2026**
**OS. No. 102/2018**
**வழக்கு சாட்சி PW.1–செல்வராஜ் , த/பெ.கோவிந்தன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) இந்த வழக்கில் நான் 2ம் வாதி என்றால் சரிதான். இந்த வழக்கு பாதைக்காக நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் மூதாதையர்கள் சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை உரிய வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தை தான் வா.சா.ஆ. 1 ஆக தாக்க்ல செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்திலேயே 12 அடி அகல பாதை பாகஸ்தர்கள் அனைவருக்கும் பாத்தியம் என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். அந்த பொதுப்பாதையை நான் பயன்படுத்த தடுத்ததால் 1ம் பிரதிவாதி முத்து என்பவர் அ.வ.எண்.142/2013 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் பதில் தாக்கல் செய்து எதிர் வழக்காடினோம் என்றால் சரிதான். அந்த பதிலில் மேற்கண்ட வழக்கு தாக்கல் செய்ததே தவறு என்று தான் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

2) அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அந்த அறிக்கை தவறாக உள்ளதாக நாங்கள் மேற்கண்ட வழக்கிலேயே சொல்லியுள்ளோம். வா.சா.ஆ–13 தான் மேற்கண்ட அ.வ.எண்.142/2013ல் தாக்கல் செய்யப்பட்ட பிராது என்றால் சரிதான். அந்த வழக்கானது எங்களுக்கு எதிராகவும், 1ம் பிரதிவாதி முத்துவிற்கு ஆதரவாகவும் தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து, அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டை எதிர்த்து 2ம் மேல்முறையீடு எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட அசல் வழக்கில் என்ன பரிகாரம்

கேட்டுள்ளார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கானது வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 12 அடி தடப்பாதை பொறுத்துதான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் தடமானது ச.எண்.47A/2A ல் தான் உள்ளது, ஆனால் 1ம் பிரதிவாதி மேற்கண்ட வழக்கில் ச.எண்.48/2 ல் தடம் உள்ளதாக தாக்கல செய்ததால் அது தவறு என்று வாதிட்டோம்.

3) ச.எண்.48/2 ஆனது எங்கள் குடும்ப சொத்து என்றால் சரிதான். ச.எண்.47A/2A என்பது கார்த்திகேயன் என்பவரது நிலம் என்றால் சரியல்ல, அதுவும் எங்கள் குடும்ப நிலம் தான். ச.எண்.47A/2A ஆனது எங்கள் வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல, உள்ளது. ச.எண்.47A/2A மற்றும் ச.எண்.48/2 ஆகிய நிலங்களுக்காகத்தான் 12 அடி தடவழி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.139A/1B ல் 15 அடி அகல வண்டிப்பாதை ஆரம்பித்து ச.எண்.47A/2A ல் 12 அடிவண்டிப்பாதையாக அனைவருக்கும் பொதுவாக உள்ளதை நாங்கள் பயன்படுத்துவதை தடுக்ககூடாது என்று தாக்கல் செய்துள்ளோம்.

4) நாங்கள் 12 அடி வண்டிப்பாதைக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் சொல்லியுள்ள 12 அடி பாதையை தான் இந்த வழக்கில் பரிகாரமாக கேட்டுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் நிலத்தில் உள்ள மேற்கண்ட 12 அடி பாதையை எங்கள் மாதிரிவரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் எங்கள் பிராது சொத்து விவரத்தில் 15 அடி பாதையாக காண்பித்துள்ளோம் என்றால் சரிதான், ச.எண்.139A/1B ல் உள்ளதாக சொல்லியுள்ளோம். ச.எண்.139A/1B என்பது எங்கள் சொத்து இல்லை என்றால் அது எங்கள் நிலம் தான், 15 அடி தடவழி போக மீதமுள்ளதை விற்றுவிட்டோம். மேற்கண்ட ச.எண்.139A/1B ல் கண்ட சொத்தை விற்பனை செய்த பத்திரத்தில் 15 அடி நிலத்தை நாங்கள் தக்க வைத்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம்.

5) ச.எண். 139A/1B என்பது எங்கள் சொத்து இல்லை என்றும், அதில் எங்களுக்கு தடவழி இல்லை என்றும், அதை நாங்கள் 15 அடி தடவழியை தக்க வைத்து கொண்டு

மீத நிலத்தை விற்றதாக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. ச.எண்.139A/1B ஐ விற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட சொத்தை எந்த காலகட்டத்தில யாருக்கு விற்பனை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த நிலத்தை வாங்கியவர் அதை பிளாட்டுகளாக போட்டு விற்பனை செய்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் சரிதானா என்றால் சரிதான். ச.எண்.139A/1B ல் உள்ள கடைசி வீடானது முருகேசன் என்ற ஒரு வழக்கறிஞரின் வீடு என்றால் சரிதான். அவர் வீட்டின் எல்லையில் அவருடைய காம்பௌண்ட் சுவர் வரைதான் எங்கள் குடும்ப சொத்தின் எல்லை உள்ளது என்றால் சரிதான்.

6) என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் பஞ்சை நிறத்தில் காட்டப்பட்டுள்ள தடத்தின் தென்புறம் முடிவடையும் இடத்தில் தான் வழக்கறிஞர் திரு.முருகேசன் அவர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் A என்று குறிப்பிட்டுள்ள இடத்திற்கு தெற்காகத்தான் முருகேசனின் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த முருகேசன் அவர்கள் வீட்டை அவர்கள் சொத்தின் அளவிற்கு கட்டி கொண்டார் என்றால் சரிதான். மேற்கண்ட திரு.முருகேசன் அவர்களின் வீடு அமைந்துள்ள இடம் தான் ச.எண்.139A/1B என்றால் சரிதான். அந்த சொத்தை தான் தாவா சொத்து விவரத்தில் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான், அதிலுள்ள எங்கள் நிலத்தை தான் கொடுத்துள்ளோம்.

7) ச.எண்.139A/1B ல் எங்களுக்கு எந்த நிலமும் இல்லை என்றால் சரியல்ல, பொதுப்பாதை உள்ளது. அந்த பொதுப்பாதை அமைந்துள்ள நிலம் எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால் ச.எண்.139A/1B1A1 ல் அமைந்துள்ளது. தாவா சொத்து விவரத்திலும், தாவாவிலும் அந்த சர்வே எண்ணை நாங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தற்போது நான் ச.எண்.139A/1B1A1 என்பதும் நான் தாவா சொத்து விவரத்தில் சொல்லியுள்ள ச.எண்.139A/1B இரண்டுமே வெவ்வேறானது என்றால் சரியல்ல. நான்

தாவாவில் சொல்லியுள்ள ச.எண்.139A/1B ஆனது நிலையில் இல்லை என்றால் உட்பிரிவு செய்வதற்கு முன்பு இருந்தது, தற்போது ச.எண்.139A/1B1A1 ஆக உள்ளது.

8) என்னிடம் காட்டப்படும் ச.எண். 139A/1B1A1 என்ற புலவரைபடத்தில் தான் நான் தாவாவில் கோரிய பாதை உள்ளதா என்றால் சரிதான். **அந்த ச.எண். 139A/1B1A1 ன் புலவரைபடம் கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பி.வா.சா.ஆ.1 புலவரைபடத்தில் பாதை உள்ளதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அந்த நிலத்தை மனைநிலங்களாக சுமார் 20 வருடங்களுக்கு முன்பு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். நான் பாதை என்று குறிப்பிட்டுள்ள தடவழி முடியும் இடத்திலுள்ள வீடு வழக்கறிஞர் திரு.முருகேசன் அவர்களின் மனைவி கோமதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தான் எங்கள் மாதிரி வரைபத்திலும் காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். அவர் தான் சுமார் 7 அடிக்கு பாதையை மறித்து காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ளார் என்றால் சுமார் 5 அடி கட்டியுள்ளார். பி.வா.சா.ஆ.1 புலவரைபடத்தில் வேறு ஒரு நிலத்தில் பாதை செல்வதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றும், நாங்கள் மாதிரி வரைபடத்தில் இல்லாத பாதையை இருப்பதாக காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல.

9) என்னிடம் காட்டப்படும் பட்டாவானது ச.எண்.139A/1B1A1 க்குண்டான பட்டா என்றால் சரிதான். அந்த பட்டாவானது முத்து, கோவிந்தன், மணி, தேவன், கோமதி, லோகநாதன் மற்றும் செல்வகுமார் ஆகியோர் பெயருக்கு கொடுக்கப்பட்டது. **அந்த பட்டா கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் குறிப்பிட்டுள்ள நல்லகாளி கவுண்டர் மகன் கோவிந்தன் என்று குறிப்பிட்டுள்ளது என் தந்தை என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள மற்ற நபர்கள் யாரும் என் உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். அவர்களை என் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அந்த சர்வே எண்.139A/1B1A1 ல் நான் தடம் எதுவும் கேட்கவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 24.02.2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.